செய்தி வெளியீடு எண்:853 நாள்:08.10.2021

<u>செய்தி வெளியீடு</u>

## சரக்கு மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின்கீழ் வரிஏய்ப்பு செய்தவர் கைது

வணிகவரித்துறையில் மேற்கொள்ளப்பட்ட புலானய்வின்போது திருநெல்வேரி கோட்டத்திற்குட்பட்ட திருவா.சஞ்சிவி இன்பிரோ இம்போர்ட் மற்றும் எக்ஸ்போர்ட் என்னும் நிறுவனம் சரக்குகளை வழங்காமல், சிமெண்ட் விற்பனை செய்ததாக போலிப்பட்டியல்கள் மூலம் பயனாளருக்கு மோசடியாக உள்ளீட்டுவரி வரவை மாற்றுவது தெரிய வந்தது. அதனடிப்படையில், வணிகவரி ஆணையர் அவர்களின் ஆணையின்படி, மாநிலவரி நுண்ணறிவுப்பிரிவு திருநெல்வேலி இணை ஆணையர் அவர்களின் மேற்பார்வையில், போலிப்பட்டியல்கள் விவகாரத்தில் சம்பந்தப்பட்ட 11 வணிகர்களின் வியபார இடங்களில், சரக்கு மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின்கீழ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின்போது சிமெண்ட் விற்பனை செய்யும் வணிகர் ரூ.8.99 கோடி ரூபாய் மதிப்பிலான விலைப்பட்டியல்களை, திருநெல்வேலி பகுதியை சார்ந்த கட்டிடம் மற்றும் சாலை ஒப்பந்தப்பணிதாரர்களுக்கு அளித்து அவர்கள் போலி உள்ளீட்டு வரி மூலம் பயனடைய செய்துள்ளது தெரியவந்தது. திரு.பெரியராஜா என்பவர் மேற்கொண்ட நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார். சரக்குகளை விற்காமல் போலி பில்கள் அளித்து போலியாக உள்ளீட்டு வரியை பயனாளிகள் துய்க்கச்செய்தது சரக்கு மற்றும் சேவைகள் வரிச்சட்டத்தின்கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும். திருநெல்வேலி மாவட்ட காவல் துறையால் இன்று திரு.பெரியராஜா கைது செய்யப்பட்டு திருநெல்வேலி குற்றவியல் நடுவர் முன் ஆஜர்படுத்தப்பட்டு பாளையங்கோட்டை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டார்.

முதன்மைச்செயலர் மற்றும் வணிகவரி ஆணையர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9